# யூன் – 01 – சனி

### தூய ஜஸ்டின்

### “உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்கு உரியவர்” – திபா 47: 2

-----------------------------------------------------------------

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி18 : 23–28

பவுல் அந்தியோக்கியாவில் சிறிது காலம் செலவிட்டபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிகியா, பகுதிகள் வழியாகச் சென்று சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார். அலக்சாந்திரியாவில் பிறந்த அப்பொல்லோ எனும் பெயருடைய யூதர் ஒருவர் எபேசு வந்தடைந்தார். அவர் சொல்வன்மை மிக்கவர் மறைநூல்களில் புலமை வாய்ந்தவர். ஆண்டவரின் நெறிகளைக் கற்றறிந்தவர் ஆர்வமிக்க உள்ளத்தோடு இயேசுவைப்பற்றிய செய்தியைப் பிழையற அறிவித்தும் கற்பித்தும் வந்தார். ஆனால் அவர் யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். அவர் தொழுகைக் கூடத்தில் துணிவுடன் பேசத் தொடங்கினார். அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கில்லாவும் அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினார். அவர் அக்காயாவுக்குப் போக விரும்பிய போது சகோதரர் சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர் அங்கே சென்றபோது இறையருளால் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்குப் பெரிதும் துணையாய் இருந்தார். ஏனெனில் அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, ”இயேசுவே மெசியா” என மறைநூல்களின்மூலம் எடுத்துக்காட்டினார்.

**பதில்பாடல் :** கடவுளே, அனைத்து உலகின் வேந்தர் நீரே

## நற்செய்தி : யோவான்16 : 23 - 28

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது: நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரை நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்.”நான் உங்களிடம் உருவகமாகவே பேசிவந்துள்ளேன். ஆனால் காலம் வருகிறது. அப்போது உருவகங்கள் வாயிலாய்ப் பேசாமல், தந்தையைப்பற்றி வெளிப்படையாய் எடுத்துரைப்பேன்.அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள். அப்போது ”உங்களுக்காகத் தந்தையிடம் கேட்கிறேன்” என நான் சொல்லமாட்டேன்.ஏனெனில் தந்தையே உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என்மீது அன்புகொண்டு, நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளார்.நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டுத் தந்தையிடம் செல்கிறேன்” என்றார்.

**தியானம்:** 2019ன் ஐந்தாம் மாதத்தில் பல்வேறு பயங்கரவாத அனுபவங்களைக் கடந்து ஆறாம் மாதத்தில் கால் பதிக்கும் எமக்கு பரலோக தகப்பனது அன்பானது எம் ஒவ்வொருவரது வாழ்வில் எவ்வளவு தூரம் அதிமுக்கியமானது என்பதனை நற்செய்தி கூறுகிறது. இறைமகன் இயேசுவின் வார்த்தைகள் அவரது சீடர்களுக்கு மட்டுமல்ல எமக்கும் கூறப்படும் வார்த்தைகளாகும். ஆதியிலிருந்தே பரலோக தகப்பனோடு தமக்குள்ள உறவினை இறைமகன் இயேசு நன்கு உணர்ந்திருந்தார். அந்த மாசு மறுவற்ற அன்பினில் அவர் இன்பமும் கண்டார். அதனாலேயே கடைசி இராவுணவு வேளையில் தமது அன்புச் சீடர்களிடம் தமக்கும் பிதாவுக்கும் இடையே இருக்கின்ற நெருக்கமான பிணைப்பினை அவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார். பரலோக தகப்பனின் அன்பைக் குறித்து எதற்காக இறைமகன் இயேசு தனது சீடர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்?. அல்லது பரலோக தகப்பனின் அன்புக்கு எதற்காக இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்? என எமதுள்ளத்தில் ஒருவித வினா எழும்புவதனை நாம் அவதானிக்கலாம். எனினும் ஈடிணையற்ற அன்பினில் சீடர்களை பிணைத்து வைக்க இறைமகன் இயேசு ஆவலாக இருக்கின்றார். சீடர்களை நோக்கி பரலோக தகப்பனிடம் “கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள் அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும்” (யோவான்16:24) என அன்பான வேண்டுகோள் விடுக்கின்றார். தமது சீடர்களோடு இறைமகன் இயேசு ஒளிவு மறைவின்றி நேரடியாகப் பேசுவதோடு பரலோக தகப்பனுடனான உறவு குறித்துத் தெளிவுபடுத்தவும் முயல்வதனை நற்செய்தியில் நாம் உன்னிப்பாக அவதானிக்கலாம். எமது பரலோக தகப்பனது அன்பைக் குறித்து இவ்வாறே நேரடியாக ஒளிவு மறைவின்றி எங்கள் ஒவ்வொருவருடனும் இறைமகன் இயேசு பேசவிரும்புகின்றார். எனவே எமது செபவேளையில் குழந்தைக்குரிய இயல்போடு அவர் முன் மண்டியிடுவோம். அவரது இனிமையான குரலைக் கேட்க எமது காதுகளை அவர் பக்கம் திருப்புவோம். இறை இரக்கத்தின் அரசரின் இதயச்சுரங்கத்தில் இருந்து வரும் பொற்கதிர்களால் எம்மை அலங்கரித்துக் கொள்வோம். “ஆண்டவரே பேசும் அடிமை நான் கேட்கின்றேன்” என சரணாகதியாகுவோம்.